# சிதம்பரம் நகராட்சி

**2026ஆம் ஆண்டு வைகாசி திங்கள் 22 ஆம் நாள் 05.06.2026ந்தேதி வெள்ளிகிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்**

**மன்றகூட்டப்பொருள்**

**1)** நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2026 முதல் மே2026 வரையிலான மாத நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்:95/4/2022/SBM2, நாள்.03.06.2026-ல் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சக அறிவுறுத்தலின்படி புதிய திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 மற்றும் அது தொடர்பான மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அறிந்துகொள்ளும் வகையிலான கூட்டம் நடத்திடவும் தொடர்ந்து 12.06.2026 முடிய பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படியான திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு**:மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்:1106/2025/எச்1)

**3)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து வரும் கங்கை மகளிர் சுய உதவிக்குழு, சிதம்பரம் மூலமாக மாவட்ட ஆட்சியர் தினக்கூலி அடிப்படையிலான கொசு ஒழிப்பு DBC பணியாளர்களின் பணிக் காலம் 30.06.2026 உடன் முடிவடைகிறது. பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மேலும் மூன்று மாதங்களுக்கு 01.07.2026 முதல் 30.09.2026 முடிய நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான பட்டியலின்படியான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு**: 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்: 2481 /2019/எச்1)

**4)** திருமதி.பூ.சங்கீதா, இளநிலை உதவியாளர் என்பவருக்கு மூன்றாவது குழந்தைக்கு மகப்பேறு விடுப்பு 31.10.2025 முதல் 31.10.2026 வரை ஓராண்டு வழங்குவது தொடர்பாக திரு.P.ஸ்ரீநிவாஸ் வழக்கறிஞரிடம் கருத்துரு பெற்றத்தற்கான கட்டணம் ரூ.30,000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4440/2025/சி1**

**5)** கோவை நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு தேர்வு நிலை நகராட்சியான சிதம்பரம் நகராட்சிக்கு 2026-2027ம் ஆண்டு பங்குத் தொகையாக ரூ.1,25,000/- செலுத்த மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1301/2023/சி1**

**6)** சிதம்பரம் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் தொடர்பான வாக்குப்பெட்டிகள் மின்னனு வாக்கு இயந்திரங்கள் மற்றும் வாக்கு பதிவிற்கு தேவையான இதரப் பொருட்கள் விருத்தாசலம் அரசு சேமிப்பு கிடங்கில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதால், அரசு சேமிப்பு கிடங்கிற்கான மாத வாடகை ஜனவரி 2025 முதல் டிசம்பர் 2025 வரையிலான 12 மாதங்களுக்கு வாடகை தொகை ரூ.22006/- தொகை செலுத்த கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.பஇ2/500/2026 நாள்.13.02.2026ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வாடகை தொகை செலுத்த மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.**3088/2021/**சி**1

**7)** இந்நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணியாற்றி வரும் V.சேகர் என்பவர் மனுவின்படி 2019-2020 ஆண்டிற்கான கீழ்கண்ட ஒப்பந்த பணிக்கு பணிதர காப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளது, அதற்கான பணிகள் முடிக்கப்பட்டுவிட்டதால், கீழ்கண்ட பணிக்கு செலுத்திய பணிதர காப்பு தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். அதன்பேரில் நகராட்சி பொறியாளரின் குறிப்பின்படி கீழ்கண்ட ஒப்பந்த பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளதால் அதற்கான தொகை செலுத்தி மூன்றாண்டுகளுக்கு மேல் காலம் கடந்துவிட்டதால் தொகை ரூ.7,82,589 -ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணியின் பெயர் | ASD |
|---|---|---|---|
| 1 | V.சேகர் | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட தமிழ்நாடு நகர்புற சாலைகள் அடிப்படை வசதிகள் திட்டம் 2018-2019 Package-2 | ரூ.7,82,589 |

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

**8)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகளின் வளாகம் மற்றும் கழிப்பறைகளைப் பராமரித்து வந்த, திருமதி. முத்துலட்சுமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் பணிக்காலம் 30.04.2026 உடன் முடிவடைந்து விட்டது. தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல்-26 மாதிரி தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்ததால் ஒப்பந்தப்பள்ளி கோரப்படவில்லை. தற்போது, பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் மாணவர்களின் சுகாதார நலன் கருதி ஏற்கெனவே பணிபுரிந்து வந்த திருமதி. முத்துலட்சுமி ஒப்பந்ததாரரின் பணியினை புதிய ஒப்பந்தப்புள்ளி கோரும் வரையிலான தோராயமாக மூன்று மாதங்களுக்கு 01.06.2026 முதல் 31.08.2026 வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்தத் தொகை விகிதத்தில் நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண்.4424/2017/எச்1)**

**9)** சிதம்பரம் நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.557 நாள்23.02.2026 அனுமதிக்கப்பட்டவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பில் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இந்நகராட்சிக்கு சொந்தமான வடக்கு மெயின் ரோடு, தினசரி நாளங்காடிக்கு தென்புரம் புதிதாக கட்டப்படவுள்ள கடைகளுக்கு 10.03.2026, 26.03.2026 மற்றும் 02.04.2026 தேதிகளில் பொது முன் ஏலம் மற்றும் பொது

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் 02.04.2026 அன்று நடைபெற்ற முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய நபர்களுக்கு கடை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

**அலுவலக குறிப்பு:**

மேற்படி மொத்தம் 9 கடைகளுக்கு 10.03.2026 ,26.03.2026 மற்றும் 02.04.2026 தேதி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது, மேற்படி மூன்று ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் 9 கடைகளுக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளதால், 02.04.2026 அன்று நடைபெற்ற முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய நபர்களுக்கு கடை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

| வ எ ண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | கடையின் முகம் | வைப்புத் தொகை ரூ. | வரைவோலை எண் / தேதி / வங்கிபெயர் | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | வரைவோலை எண் / தேதி / வங்கிபெயர் | 10.03.2026 தேதியை ஒரு மாதத்திற்கு கோரப்பட்ட வாடகை விவரம் | 26.3.2026 தேதியை ஒரு மாதத்திற்கு கோரப்பட்ட வாடகை விவரம் | 02.4.2026 தேதியை உயர்ந்தபட்ச ஒரு மாதத்திற்கான கோரப்பட்ட வாடகை விவரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | J. முகமது ஷெரிப் எல்லையம்மன் கோவில் தெரு சிதம்பரம் | வடக்கு பார்த்த கட்டிடம் கடை எண்:6 | 200000 | DD No - 598249 DT- 09.03.2026 INDIAN BANK CDM | 100000 | DD No - 005643 DT- 09.03.2026 HDFC BANK CDM | ரூ.3600/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.3610/- |
| 2 | ஜெ. கோபு த/பெ. ஜெயராமன் வ உ சி தெரு சிதம்பரம் | வடக்கு பார்த்த கட்டிடம் கடை எண்:13 | 200000 | DD No - 513630 DT- 09.03.2026 SBI BANK/ CDM | 100000 | DD No - 513629 DT- 09.03.2026 SBI BANK/CDM | ரூ.3200/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.3220/- |
| 3 | M.பாண்டியன் த/பெ V.மணி 1, அன்னை தெரசா நகர் (சாந்தி நகர்) சிதம்பரம் | வடக்கு பார்த்த கட்டிடம் கடை எண்:11 | 200000 | DD NO:481695 DT- 09.03.2026 INDIAN BANK/ CDM | 100000 | DD NO:481694 DT- 09.03.2026 INDIAN BANK/CDM | ரூ.3200/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.3210/- |
| 4 | A.காண்டிபன் த/பெ ஆறுமுகம் 23/E,காமாட்சி அம்மன் கோவில் தெரு சிதம்பரம் | வடக்கு பார்த்த கட்டிடம் கடை எண்:5 | 200000 | DD NO:005641 DT- 09.03.2026 HDFC BANK/ CDM | 100000 | DD NO:005642 DT- 09.03.2026 HDFC BANK/CDM | ரூ.3600/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.3615/- |
| 5. | செந்தில்நாதன் 82/31, 32 nd ஜீவானந்தம் தெரு G.K.M காலனி, சென்னை | வடக்கு பார்த்த கட்டிடம் கடை எண்:1 | 200000 | DD NO:802392 DT- 09.03.2026 CUB BANK/ CDM | 100000 | DD NO:802392 DT- 09.03.2026 CUB BANK/ CDM | ரூ.3700/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.3720/- |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | Sநடராஜன் த/பெ சம்பந்தம், 30, 3-வது குறுக்கு தெரு எம்ஜிஆர் நகர் பள்ளிப்படை சிதம்பரம் | வடக்கு பார்த்த கட்டிடம் கடை எண்:3 | 200000 | DD NO:598238 DT-07.03.2026 INDIAN BANK/ ANNAMALAI NAGAR, CDM | 100000 | DD NO:598239 DT-07.03.2026 INDIAN BANK/ ANNAMALAI NAGAR, CDM | ரூ.3600/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.3615/- |
| 7. | S.சண்முகம் த/பெ சிவராம சேது 61,தெற்கு ரத வீதி சிதம்பரம் | வடக்கு பார்த்த கட்டிடம் கடை எண்:2 | 200000 | DD NO:598248 DT-09.03.2026 INDIAN BANK/ ANNAMALAI NAGAR, CDM | 100000 | DD NO:598247 DT-09.03.2026 INDIAN BANK/ ANNAMALAI NAGAR, CDM | ரூ.3600/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.3625/- |
| 8. | மனோன்மணி க/பெ நடராஜன் 30, எம்ஜிஆர் நகர் பள்ளிப்படை சிதம்பரம் | வடக்கு பார்த்த கட்டிடம் கடை எண்:4 | 200000 | DD NO:118655 DT-07.03.2026 DHANALAKSHMI BANK/ CDM | 100000 | DD NO:118654 DT-07.03.2026 DHANALAKSHMI BANK/ CDM | ரூ.3600/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.3615/- |
| 9. | K.மணிகண்டன் த/பெ கண்ணன் 286, தையாகுப்பம் ரோடு மணலூர் லால்புரம் கடலூர் | வடக்கு பார்த்த கட்டிடம் கடை எண்:10 | 200000 | DD NO:033224 DT-09.03.2026 CANARA BANK/ CDM | 100000 | DD NO:033225 DT-09.03.2026 CANARA BANK/ CDM | ரூ.3200/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.3220/- |

**10)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீசிவகாம சுந்தரி ஸமேத ஸ்ரீமத் ஆனந்த நடராஜமூர்த்தி திருக்கோவிலின் 2026-ஆம் ஆண்டு ஆனி மாத திருமஞ்சன தரிசன மஹோத்ஸவத்தை முன்னிட்டு வழக்கம்போல் ஆனி மாத தேர் திருவிழாவிலிருந்து 30 நாட்களுக்கு கீழரத வீதியில் கிழக்கு சன்னதிக்கு தென்புற சாலையில் இருபுறமும் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படாத வண்ணம் திருவிழா கடைகள் அமைக்கவும், நகராட்சியால் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும், குத்தகை ஏலம் எடுப்பவர்களின் சொந்த செலவிலும், பொறுப்பிலும் தற்காலிக தகர கொட்டாய்கள் அமைத்து கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அதற்கான விளம்பர செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1.மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண்.1476/2022/அ1)**

**11)** சிதம்பரம் நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.555 நாள்.23.02.2026 அனுமதிக்கப்பட்டவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பில் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இந்நகராட்சிக்கு சொந்தமான புதியதாக கட்டப்பட்டு வரும் மேல வீதி நீர்த்தேக்க தொட்டி முன்புற மாடிப்படி சாய் தள கடை 10.03.2026 ந் தேதி பொது முன்

ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| மேலவீதி நீர்த்தேக்க தொட்டி முன்புறம் புதிதாக கட்டப்பட்டுள்ள மாடிப்படி சாய் தள கடை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ எண் | குத்தகைதாரர் பெயர் திருவாளர்கள் / முகவரி | வைப்புத் தொகை ரூ. | வரைவோலை எண் / தேதி / வங்கிபெயர் | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | வரைவோலை எண் / தேதி / வங்கிபெயர் | ஒரு மாதத்திற்கு கோரப்பட்ட வாடகை விவரம் | உயர்ந்தபட்ச ஒரு மாதத்திற்கான கோரப்பட்ட வாடகை விவரம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | R.இளங்கோவன் த/பெ. ராதாகிருஷ்ணன் 12,S R Nagar, நான்முனிசிபல், சிதம்பரம் | 1,00,000/- | DD NO:802390 DT-06.03.2026 CUB BANK / CDM | 50,000/- | DD NO:802389 DT-06.03.2026 CUB BANK / CDM | ரூ.3,150/-- | **ரூ.3,150/--** |
| 2. | ர. கார்த்திக் விக்ரம் த/பெ ரவி, 143,பாரதி நகர், சி.கொத்தங்குடி, சிதம்பரம் | 1,00,000/- | DD NO:802391 DT-06.03.2026 CUB BANK / CDM | 50,000/- | DD NO:802388 DT-06.03.2026 CUB BANK / CDM | ரூ.3,000/- | ரூ.3,000/- |

**அலுவலகக்குறிப்பு**-

1. கலம் 1-ல் குறிப்பில் கண்டுள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ள திரு. R.இளங்கோவன் த/பெ. ராதாகிருஷ்ணன் என்பவருக்கு கடை உரிமம் வழங்கலாம்..
2. மேற்கண்ட கடையினை ஒப்படைக்கும் நாள் முதல் வாடகை வசூலித்துக்கொள்ளலாம்.
3. நகராட்சி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1476/2022/அ1**

**12)** இந்நகராட்சிக்கு சொந்தமான கொத்தவால் ஸ்டேஷன் தெருவில் அமைந்துள்ள கட்டண கழிவறை வசூல் செய்யும் உரிமம் 01.11.2022 முதல் 31.10.2025 வரையில் பொது ஏலம் மூலம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கழிவறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வந்ததாலும், தொடர்ந்து பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டுவந்த நிலையில் ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை. பராமரிப்பு பணிகள் ஒரு மாதம் காலம் நடைபெற்றதால் 01.12.2025 முதல் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தொடர்ந்து பொது ஏலம் விடுவதற்கு தேர்தல் நடத்த விதிமுறைகள் இருந்ததால் ஏலம் நடத்தப்படாமல் இருந்த நிலையில், புதியதாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1.மன்றம் அனுமதிக்கலாம்

2. துறையின் மூலம் வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாததால், பொது ஏலம் (ம)ஒப்பந்தப்புள்ளி நடத்துவதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1476/2022/அ1)**

**13)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.480 நாள்.16.12.2025 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12199/ஆர்1/2025 நாள்.24.12.2025ன்படி சொத்துவரி பெயர்மாற்றம் கட்டணங்களை நிர்ணயித்து, வசூல் செய்திட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி குடியிருப்பு பயன்பாட்டிற்கு ஒரு சொத்து வரி விதிப்பு எண்ணிற்கு ரூ.500/- மற்றும் பிற பயன்பாட்டிற்கு ரூ.1000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**14)** சிதம்பரம் நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.491 நாள்.29.12.2025 அனுமதிக்கப்பட்டவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பில் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இந்நகராட்சிக்கு சொந்தமான புதியதாக கட்டப்பட்டு வரும் மேல வீதி நீர்த்தேக்க தொட்டி முன்புற கடை மற்றும் வடக்கு மெயின் ரோடு கஞ்சி தொட்டி கடைகளுக்கு 17.02.2026, 26.02.2026 மற்றும் 05.03.2026ந் தேதி பொது முன் ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வடக்கு மெயின் ரோடு கடை எண் -1 க்கு ஒரு மாதத்திற்கான வாடகை தொகை கோரப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வடக்கு மெயின் ரோடு கஞ்சி தொட்டி கடை எண்:1 | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ எண் | குத்தகைதாரர் பெயர் திருவாளர்கள் / முகவரி | வைப்புத் தொகை ரூ. | வரைவோலை எண் / தேதி / வங்கிபெயர் | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | வரைவோலை எண் /தேதி / வங்கிபெயர் | 17.02.2026 ஒரு மாதத்திற்கு கோரப்பட்ட வாடகை விவரம் | 26.02.2026 ஒரு மாதத்திற்கான கோரப்பட்ட வாடகை விவரம் | 05.03.2026 உயர்ந்தபட்ச ஒரு மாதத்திற்கான கோரப்பட்ட வாடகை விவரம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | 8 |
| 1. | A.விஜயகுமார் த/பெ அர்ஜுனன் S5,ரூபி அப்பார்ட்மெண்ட், கன்னிராமன் தெரு, சிதம்பரம். | 200000 | DD NO:074727 DT-16.02.2026 TMB BANK / CDM | 100000 | DD NO:074726 DT-16.02.2026 TMB BANK / CDM | ரூ.5250/- | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை | **ரூ.5270/-** |

**அலுவலகக்குறிப்பு**-

1. கலம் 8-ல் குறிப்பில் கண்டுள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ள திரு.A.விஜயகுமார் த/பெ அர்ஜுனன் என்பவருக்கு கடை உரிமம் வழங்கலாம்.
2. மேற்கண்ட கடையினை ஒப்படைக்கும் நாள் முதல் வாடகை வசூலித்துக்கொள்ளலாம்.

**ந.க.எண். 1476/2022/அ1**

**15)** சிதம்பரம் நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.491 நாள்.29.12.2025 அனுமதிக்கப்பட்டவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பில் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இந்நகராட்சிக்கு சொந்தமான புதியதாக கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்திற்கு 26.02.2026, 05.03.2026 மற்றும் 12.03.2026 தேதிகளில் பொது முன் ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் 6 கடைகளுக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளதால், 12.03.2026 அன்று நடைபெற்ற முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய நபர்களுக்கு கடை உத்தரவு

வழங்க மன்றம் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

| வ எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | கடை விவரம் | கடையின் முகம் | வைப்புத் தொகை ரூ. | வரைவோலை எண் / தேதி / வங்கிபெயர் | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | வரைவோலை எண் / தேதி / வங்கிபெயர் | 26.02.2026 தேதியை ஒரு மாதத்திற்கு கோரப்பட்ட வாடகை விவரம் | 05.3.2026 தேதியை ஒரு மாதத்திற்கு கோரப்பட்ட வாடகை விவரம் | 12.3.2026 தேதியை உயர்ந்தபட்ச ஒரு மாதத்திற்கான கோரப்பட்ட வாடகை விவரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | J. செல்வகுமாரி க/பெ. வாசகன் 2/593,மேலத் தெரு கோவிலாம்பூண்டி சிதம்பரம் (வ). | Center building | கிழக்கு பார்த்த கடை எண்:11 | 300000 | DD No - 157704 DT- 20.02.2026 INDIAN BANK CDM | 100000 | DD No 157705 DT- 20.02.2026 INDIAN BANK CDM | ரூ.4350/- | ஏலம் (ம) ஒப்பந்தப் புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.4360/- |
| 2 | A.தமிழ்செல்வம் த/பெ அரிகோவிந்தன் Pl. No. 2, 1 வது குறுக்கு தெரு, 1 வது மெயின் ரோடு, Golden wood roof nagar Old pallavaram, Chennai. | Center building | கிழக்கு பார்த்த கடை எண்: 13 | 300000 | DD No - 118653 DT- 23.02.2026 DHANALAKSHMI BANK/CDM | 100000 | DD No - 118652 DT- 23.02.2026 DHANALAKSHMI BANK/CDM | ரூ.4300/- | ஏலம் (ம) ஒப்பந்தப் புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.4320/- |
| 3 | T. பூங்குன்றன் த/பெ.தமிழ்அரசன் 5/2,பழைய தெரு, பூந்தோட்டம், வாக்கூர்(அ) சிதம்பரம் (வ). 30/14,கொத்தங்குடி தெரு, சிதம்பரம் | Center building | மேற்கு பார்த்த கடை எண்: 14 | 300000 | DD NO:845318 DT- 23.02.2026 PNB BANK/CDM | 100000 | DD NO:845319 DT- 23.02.2026 PNB BANK/CDM BANK/CDM | ரூ.4300/- | ஏலம் (ம) ஒப்பந்தப் புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.4320/- |
| 4 | சி. ப..நந்தினி தேவி த/பெ.பரசுராமன் 17,18,SR நகர், 1 st Cross சிதம்பரம் (நான் முனிசிபல்). | Center building | கிழக்கு பார்த்த கடை எண்:1 | 300000 | DD NO:513588 DT- 16.02.2026 SBI BANK/CDM | 100000 | DD NO:513587 DT- 16.02.2026 SBIBANK/CDM | ரூ.4300/- | ஏலம் (ம) ஒப்பந்தப் புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.4310/- |
| 5. | அகமது பாஷா த/பெ கௌஸ் பாஷா, 4/1,எல்லையம்மன் கோவில் தெரு. சிதம்பரம். | Arch Building | தெற்கு பார்த்த கடை எண்:1 | 300000 | DD NO:074744 DT- 25.02.2026 TMB BANK/CDM | 100000 | DD NO:074745 DT- 25.02.2026 TMB BANK/CDM | ரூ.4600/- | ஏலம் (ம) ஒப்பந்தப் புள்ளி கோர எவரும் முன்வர வில்லை | ரூ.4630/- |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | குமார் த/பெ. முத்துகிருஷ்ணன் 27A/14,லால்பேட்டை தெரு, சிதம்பரம். | Arch Building | தெற்கு பார்த்த கடை எண்: 24 | 300000 | DD NO:313655 DT-17.02.2026 KVB BANK/ CDM | 100000 | DD NO:313662 DT-17.02.2026 KVB BANK/ CDM | ரூ.4200/- | ஏலம் (ம) ஒப்பந்தப் புள்ளிகோர எவரும் முன்வரவில்லை | ரூ.4225/- |

**16)** சிதம்பரம் நகராட்சி 2026-2027 ஆம் ஆண்டுக்கான வரி வசூல் செய்யும் பொருட்டு கேட்பு அறிவிப்பு அச்சடித்து கொள்முதல் செய்வதற்கு மற்றும் மேற்படி ஆண்டிற்கு வரி வசூல் பணி மேற்கொள்ள ஆட்டோ மூலம் ஒலி பெருக்கி பொருத்தி விளம்பரம் செய்யவும், மேலும் விளம்பரம் பலகை முக்கிய இடங்களில் வைத்திடவும் உத்தேச செலவின தொகை ரூ.4,00,000/- செலவு செய்ய மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி அரசு சார்பு துறை கூட்டுறவு நிறுவனமாக தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சியிலிருந்து கேட்பு அறிவிப்பு அச்சடித்து அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**17)** இந்நகராட்சியில் கீழ்கண்ட இனங்களுக்கு குடிநீர் இணைப்பு இல்லாமல் தவறுதலாக தொடர்ந்து கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. நேரில் ஆய்வு செய்து கழிப்பிடம் இல்லை என குழாய் பொறுத்துனர் அறிக்கை அளித்துள்ளார். கீழ்கண்ட 8 இனங்களுக்கான குடிநீர் இணைப்பு கட்டணம் ரூ.80,500/- தொகை பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. எனவே, நிலுவை தொகையினை முழுமையாக ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குடிநீர் இணைப்பு எண் | முகவரி | கைபேசி எண் | நிலுவை தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | 092/022/ 900062 | பெரியநாயகத்தம்மாள்,<br>21A,வ.உ.,சி தெரு, சிதம்பரம். | 9843790881 | 15000/- |
| 2 | 092/003/ 900088 | துரைராஜ். வி.எஸ்,<br>25, காயத்திரி அம்மன் கோயில் தெரு, சிதம்பரம். | 9487877231 | 12600/- |
| 3 | 092/003/ 900089 | அலைஸ் துரைராஜ்,<br>25/1, காயத்திரி அம்மன் கோயில் தெரு, சிதம்பரம். | 9487877231 | 13500/- |
| 4 | 092/009/ 900075 | தில்லை நாயகம்,<br>16,புதுத் தெரு, சிதம்பரம். | | 15600/- |
| 5 | 092/013/ 900182 | கிருஷ்ணமூர்த்தி. என்<br>29/30, அனந்தீஸ்வரன் கோயில் மேற்கு தெரு, சிதம்பரம். | 7397197461 | 2400/- |
| 6 | 092/003/ 900065 | பத்மாவதி அம்மாள்,<br>B, காயத்ரியம்மன் கோவில் தெரு, சிதம்பரம். | 8056301591 | 10800/- |
| 7 | 092/006/ 900081 | சுவாமிநாதன். வி,<br>18, வாகீசா நகர், சிதம்பரம். | 9488951269 | 7800/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 092/011/ 900076 | முக்தார் ஹுசேன். எம்,<br>2A, பெரிய வாணிய தெரு, சிதம்பரம். | | 2800/- |
| | | | **மொத்தம்** | **80,500/-** |

மேற்கண்ட இனங்களுக்கான தொகை ரூ.80,500/-ஐ கணினியில் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**18)** இந்நகராட்சியில் கீழ்கண்ட இனங்களுக்கு பாதாள சாக்கடை இணைப்பு இல்லாமல் தவறுதலாக தொடர்ந்து கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. நேரில் ஆய்வு செய்து கழிப்பிடம் இல்லை என குழாய் பொறுத்துனர் அறிக்கை அளித்துள்ளார். கீழ்கண்ட 22 இனங்களுக்கான பாதாள சாக்கடை கட்டணம் ரூ.1,49,720/- தொகை பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. எனவே, நிலுவை தொகையினை முழுமையாக ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பாதாள சாக்கடை இணைப்பு எண் | முகவரி | கைபேசி எண் | நிலுவை தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | 092/022/ 900497 | R.அசோக்குமார்,<br>9/5, சாத்தப்பாடி தெரு, சிதம்பரம். | 7397164469 | 7200/- |
| 2 | 092/018/ 900280 | விஜயகாந்த், டி கே,<br>14,15/ சிதம்பரம். | 9345005815 | 14,400/- |
| 3 | 092/009/ 900169 | Bசங்கர். ஆர், 22,காரைக்காட்டு சொக்கலிங்கம் தெரு, சிதம்பரம். | 8668196923 | 14,400/- |
| 4 | 092/010/ 900671 | முகம்மது ஷெரிப்,<br>ஏ14-A, ஜவஹர் தெரு, சிதம்பரம். | 9789706325 | 8,640/- |
| 5 | 092/010/ 900291 | செல்வராஜன்.கே 23/23/சிவகாமியம்மன் கோவில் தெரு, சிதம்பரம். | 7010358131 | 7,200/- |
| 6 | 092/019/ 900071 | அன்பழகன்.எ.ஸ்<br>29A. மெயக்காவல் தெரு, சிதம்பரம் | 9597274491 | 2300/- |
| 7 | 092/009/ 900124 | நபீசா,பீவி<br>25/1/25/1/காரைக்காட்டு சொக்கலிங்கம் தெரு, சிதம்பரம் | 9842191521 | 10,800/- |
| 8 | 092/028/ 900040 | பி.திருஞானம்,<br>மன்னார்குடி ரோடு தெரு, சிதம்பரம் | 9443241172 | 7200/- |
| 9 | 092/010/ 900772 | அசோக்குமார் ஜெயின் ஜி<br>181/A, மேலரத வீதி, சிதம்பரம் | 7010545627 | 7,200/- |
| 10 | 092/004/ 900253 | யாஸ்மின் அக்தர்.கா ,<br>1/1/நடராஜ கார்டன் 1, சிதம்பரம் | 9443876982 | 7,200/- |
| 11 | 092/023/ 900193 | ஷேக் ஹசேனுதீன். எஸ்.எம்<br>91A, செங்கழுநீர்பிள்ளையார்கோவில் தெரு, சிதம்பரம் | 9344734223 | 4,800/- |
| 12 | 092/023/ 900199 | ஷேக் ஹசேனுதீன். எஸ்.எம்<br>91/5/91/5/செங்கழுநீர்பிள்ளையார்கோவில் தெரு, சிதம்பரம் | 9344734223 | 7200/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | 092/023/ 900200 | ஷேக் ஹசேனுதீன். எஸ்.எம், 91/6/91/6/செங்கழுநீர்பிள்ளையார்கோவில் தெரு, சிதம்பரம் | 9344734223 | 7,200/- |
| 14 | 092/023/ 900201 | ஷேக் ஹசேனுதீன். எஸ்.எம் 91/7/91/7/செங்கழுநீர்பிள்ளையார்கோவில் தெரு, | 9344734223 | 7,200/- |
| 15 | 092/023/ 900202 | ஷேக் ஹசேனுதீன். எஸ்.எம் 91/8/91/8/செங்கழுநீர்பிள்ளையார்கோவில் தெரு, சிதம்பரம் | 9344734223 | 7,200/- |
| 16 | 092/022/ 900685 | க.ஜெயமணி, 7E/1/7E/1/வேணுகோபால் தெரு, சிதம்பரம் | 9003741468 | 1,200/- |
| 17 | 092/022/ 900686 | மணிமாறன்.கா, 7C/1/7C/1/வேணுகோபால் தெரு சிதம்பரம் | 9003741468 | 1,200/- |
| 18 | 092/013/ 900050 | முருகன். என்12/2/12/2/திரௌபதியம்மன் கோவில் தெரு, சிதம்பரம் | 9842197489 | 0 |
| 19 | 092/008/ 900605 | அன்பழகன். சி வசந்தி. 45, புதுத்தெரு சிதம்பரம் | 9597274491 | 2700/- |
| 20 | 092/011/ 900161 | அபுசல்னுசியா. எஸ் 2/A/2/A/பெரிய வாணிய தெரு சிதம்பரம் | 9443559344 | 7200/- |
| 21 | 092/020/ 900358 | திருநாவுக்கரசு, 35/35/காந்தி நகர்,சிதம்பரம் | 6594873595 | 8640/- |
| 22 | 092/003/ 900370 | சிலம்புச்செல்வி த 3/3/சுவாதி நகர்,சிதம்பரம் | 9442531770 | 8640/- |
| | | | மொத்தம் | **1,49,720/-** |

மேற்கண்ட இனங்களுக்கான தொகை ரூ.1,49,720/-ஐ கணினியில் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**19)** சிதம்பரம் நகராட்சி ஆண்டு கணக்குகள் Web Based Accounts தயார் செய்து 2024-2025 ம் ஆண்டிற்கு கணினியில் முடித்து Trial Balance, Balance Sheet, Income and Expenditure Statement ஆண்டு கணக்குகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் இதர இணைப்புகள் Xerox எடுத்து பைண்டிங் செய்து, Srinivas Computers விழுப்புரம் நிறுவனம் மூலம் 2024-2025 ஆம் ஆண்டு கணக்குகள் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதால் அதற்கான செலவு தொகை ரூ.90,000/- Srinivas Computers நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: அவசர அவசியம் கருதி 2024-2025 ஆம் ஆண்டு தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு மேற்கண்ட தொகை வழங்கியதை அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4376/2020/பி2**

**20)** அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு நிதி (I&A) 2023-24-ன்கீழ் சிதம்பரம் நகராட்சி லால்புரத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி ரூ. 1500.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பேருந்து நிலையத்தில் எதிர்புறம் அமைக்கப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை 3.05 மீட்டர் உயரமாக உள்ளது.

மேலும் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படியும், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படியும், தற்பொழுது புதியதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தினை தேசிய நெடுஞ்சாலைக்கு நிகராக உயர்த்த வேண்டும் என்றும், அதற்கான மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

மேலும் அரசு துணை செயலாளர், தலைமை செயலகம், சென்னை அவர்களின் களஆய்வின்போது, பேருந்து நிலையத்திற்கு அணுகு சாலை அமைத்திட நடவடிக்கை எடுத்திடவும், தேசிய நெடுஞ்சாலைக்கு சமமாக பேருந்து நிலைய தரைமட்டத்தை உயர்த்துவதற்கு மண் நிரப்பிட திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நேரடி அறிவுரையின்படி புதியதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தில் மண் நிரப்புதல், தடுப்பு சுவர் மற்றும் மழைநீர் வடிகால் ஆகிய பணிகளை மேற்கொள்ள **Operation and Maintenance Deficit Grant Fund** 2024-25 திட்டத்தின்கீழ் ரூ.830.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு M/s. Abbundu Interior & Construction நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி பணியை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் M/s. Abbundu Interior & Construction நிறுவனம் மதிப்பீட்டில் மண் நிரப்புதல் பணிக்கு 5 கி.மீ தூரத்திலிருந்து மண் கொண்டுவந்து நிரப்பிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பணியிடம் அருகில் சுமார் 25 கி.மீ சுற்றளவிற்கு எங்கும் மண் கிடைக்கப்பெறவில்லை. எனவே நெய்வேலி NLC India Limited Corporate சுரங்கப்பகுதியிலிருந்து மண் கொண்டுவர தங்களுக்கு 45 கி.மீ தூரம் கூடுதல் Lead வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள்.

அதன்படி தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு 06.06.2025ல் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி விரைந்து Lead க்கான தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கிடவும், மேற்படி திருத்திய மதிப்பீட்டிற்கு பின்னேற்பு பெற்றுக்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) திட்ட மதிப்பீட்டின் தொகைக்கு மிகாமல் பணி செய்து முடிக்க மன்றம் அனுமதிக்கலாம்

**21)** சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையம், சிதம்பரம் நகராட்சி பகுதியில் இயங்கும் குடிநீர் நீரேற்று நிலைம் மற்றும் நகராட்சி எல்லைக்குள் இயங்கும் மின் பவர்பம்புகள் ஆகியவற்றில் இயங்கும் மோட்டார்கள் அடிக்கடி

பழுது ஏற்பட்ட வண்ணம் உள்ளது. இதனை தவிர்த்திடும் பொருட்டு 1.5 HP, 7.50 HP, 5.00 HP, 1.00 HP மற்றும் Panel board புதியதாக கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.12.50 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**22)** சிதம்பரம் நகராட்சி கஞ்சித்தொட்டி முனையில் வருவாய் நிதி 2025-26-ன்கீழ் மூன்று கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் பணி மேற்கொள்ளும்போது கூடுதலாக பேவர் பிளாக், டைல்ஸ், Rolling shutter, Handrails, lighting Arrangements மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 3.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**: மன்றம்அனுமதிக்கலாம்.

**23)** சிதம்பரம் நகராட்சிக்கு **6TH SFC- GRANTS FOR TOURISM TOWNS FIXED GRANT 2024-25 & 2025-26**-ன் கீழ் ரூ.15.00 இலட்சத்திற்கு சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வடக்கு மெயின்ரோட்டில் (N-S) மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு 04.03.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி , நாஞ்சலூர் என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

**24)** இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் இயங்கி வரும் மினி பவர் பம்புகள் ஏற்படும் பழுதுகளை அகற்றவும் மோட்டார் காயில் கட்டவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் கழிவறையில் அமைக்கப்பட்டுள்ள மோட்டர்களை பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் (ஆண்டு பராமரிப்பு) தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.15,00,000/- ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**25)** அரசாணை எண்.28//MAWS(MAlll) துறை நாள்.27.01.2014ன் படி சிதம்பரம் நகரின் சுற்றுபுற சுகாதார நலன் கருதி புதிய பாதாளசாக்கடை திட்டம் ரூ.7562.23 லட்சம் செலவினத்தில் அமைத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.05.2020 அன்று பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் சோதனை ஓட்டம் பூர்த்தி அடைந்து ஒப்பந்த நிபந்தனைகளின்படி கடந்த 01.07.2020 முதல் ஐந்தாண்டுகள்வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமே இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்த நிலையில், தற்பொழுது கண்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் அவர்களின் கடிதத்தின்படி 30.07.2025ன் தங்களது

ஐந்து ஆண்டுகால பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் ஒப்பந்தகாலம் முடிவுற்றுள்ளதால், சிதம்பரம் நகராட்சி 01.08.2025 முதல் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் பொறுப்பு ஏற்றுகொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை சிதம்பரம் நகராட்சி மூலம் மேற்கொள்ள ஓராண்டுக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.135.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, செலவினத்தை அரசின் ஏதாவது ஒரு திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்து, ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள அனுமதியும் வழங்கி உதவுமாறு 14.10.2025 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி ஓராண்டு பராமரிப்பு பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி திட்ட கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் சட்டமன்ற தேர்தல் நடத்தைவிதி நடைமுறையில் உள்ளதாலும் நிர்வாக அனுமதி பெறுவதற்கு காலதாமதம் ஏற்படுவதாலும், பணியின் அவசர அவசியம் கருதி M/s. KEYEM INFRA PROJECT PVT LTD., நிறுவனத்தாரிடமிருந்து 01.04.2026 முதல் 30.06.2026 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்கு பராமரிப்பு பணியினை காலநீட்டிப்பு செய்திடவும், ஏப்ரல் - 2026 மாதம் பராமரிப்பு பணிமேற்கொண்டதற்கு ரூ.9,39,542/-க்கு பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. திட்ட நிதியை எதிர்நோக்கி பாதாள சாக்கடை வைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி, ஏப்ரல் -2026 மாதம் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**26)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 16, இளமையாக்கினார் கீழ்கரை தெருவில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் செல்லாமல் உள்ளது. மேற்படி பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருகிறது என அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிதற்கிணங்க, மேற்படி தெருவில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,00,000/-ஐ எதேனும் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**27)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 16, சின்ன செட்டி தெருவில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் செல்லாமல் உள்ளது. மேற்படி பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருகிறது என அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிதற்கிணங்க, மேற்படி தெருவில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12,00,000/-ஐ எதேனும் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**28)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண்.14-ல் கழிவறை வசதியின்றி பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். மேற்படி அவ்வார்டு பொதுமக்களிடமிருந்து கழிவறை அமைத்து தரக்கோரியும் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினரின் அறிவுரையின்படி மேற்படி வார்டில் நவீன கழிவறை கட்டும் பணிக்கு ரூ. 15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**29)** சிதம்பரம் நகராட்சியில் 2025-2026 ம் ஆண்டிற்கான புதிய பாதாள சாக்கடை இணைப்பு பயன்பாட்டிற்கான கட்டண வரி கேட்பு எழுப்பும் போது 2021-2025 ஆண்டு முதல் கேட்பு வழங்கப்படுகிறது. இதனால் கூடுதலாக மூன்றாண்டுகள் பாதாள சாக்கடை வரி செலுத்தும் நிலை ஏற்படுகிறது. இதனால் பொது மக்களுக்கு வரி சுமை ஏற்படுவதாக பொது மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து தொடர்ந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி இணைப்பு வழங்கப்பட்ட ஆண்டு முதல் பாதாள சாக்கடை வரி கேட்பு வழங்கவும், கூடுதலாக கேட்பு எழுப்பப்பட்டுள்ள ஆண்டுகளுக்கான வரிகளை ரத்து செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**30)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட தெருவில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் செல்லாமல் உள்ளது. மேற்படி பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருகிறது என அந்தந்த வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிதற்கிணங்க, மேற்படி தெருவில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.760.00 இலட்சத்தை எதேனும் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண் | தெருக்கள் | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 1 | கன்னிராமன் தெரு பழைய புவனகிரி சாலை | 30.00 |
| 2 | 2 | ராஜலட்சமி நகர் | 30.00 |
| 3 | 3 | சுவாதி நகர் | 25.00 |
| 4 | 3 | மீனவர் காலனி | 15.00 |
| 5 | 5 | புளியந்தோப்பு | 20.00 |
| 6 | 6 | வாகீச நகர் | 20.00 |
| 7 | 7 | மன்மதசாமி நகர் | 15.00 |
| 8 | 7 | காரியபெருமாள் கோவில் தெரு | 15.00 |
| 9 | 8 | பதினாறுகால் மண்டபத்தெரு | 20.00 |
| 10 | 10 | ஜவஹர் தெரு | 7.00 |
| 11 | 15 | எல்லையம்மன் கோவில் தெரு | 18.00 |
| 12 | 19 | கமலீஸ்வரன் கோவில் தெரு | 45.00 |
| 13 | 19 | மெய்க்காவல் தெரு | 15.00 |

| | | | |
|---|---|---|---|
| 14 | 20 | கோவிந்தசாமி தெரு | 30.00 |
| 15 | 20 | காந்தி நகர் | 25.00 |
| 16 | 21 | அண்ணா தெரு | 25.00 |
| 17 | 22 | வ.உ.சி தெரு | 25.00 |
| 18 | 22 | போல்நாராயணன் தெரு | 30.00 |
| 19 | 23 | எஸ்.பி கோவில் தெரு | 30.00 |
| 20 | 23 | சபாநாயகர் தெரு | 30.00 |
| 21 | 24 | திருபாட்டான் தெரு | 20.00 |
| 22 | 24 | பஜனை மட தெரு | 15.00 |
| 23 | 25 | காமராஜர் நகர் உள்ளிட்ட பகுதிகள் | 20.00 |
| 24 | 26 | குஞ்சிரமூர்த்தி விநயாகர் மடவிளாகத்தெரு | 25.00 |
| 25 | 27 | மின்நகர் | 25.00 |
| 26 | 28 | ஞாயிற்றுகிழமை மடத்தெரு | 25.00 |
| 27 | 29 | சோமசுந்தரம் தெரு | 20.00 |
| 28 | 30 | தில்லைநடராஜ சாலை | 25.00 |
| 29 | 31 | கனகசபை நகர் 3-வது மெயின் ரோடு | 40.00 |
| 30 | 32 | சிவசிவ நகர் பூங்கா | 45.00 |
| 31 | 33 | இந்திரா நகர் உள்ளிட்ட பகுதிகள் | 30.00 |
| | | **கூடுதல்** | **760.00** |

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**31)** சிதம்பரம் நகரின் சுற்றுபுற சுகாதார நலன் கருதி அரசாணை எண்.28//MAWS(MAlll) துறை நாள்.27.01.2014ன் படி புதிய பாதாளசாக்கடை திட்டம் ரூ.7562.23 லட்சம் செலவினத்தில் அமைத்திட நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டு, மேலும் பார்வை 2ல் கண்டுள்ள அரசாணையின்படி திருத்திய நிர்வாக அனுமதி ரூ. 9163.06 கோடி மதிப்பீட்டில் பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.05.2020 அன்று பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

மேலும் இத்திட்டத்தில் கழிவு நீர் சுத்தகரிப்புநிலையம் சிதம்பரம் நகராட்சிக்குபாத்தியபட்ட லால்புரம் பகுதியில் 15 ஏக்கர் பரப்பரவில் 9.44 MLD செயல்திறனுடன் பாசிமுத்தான் ஓடையில், சுத்திகரிக்கப்படும் கழிவு நீர் விடும் வகையில் வடிவமைத்து (Original scope) தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திடம் சுத்தகரிப்பு நிலையம் நிறுவுவதற்கான இசைவு Establish No..180114205033, நாள்.07.09.2018-ன் படி நிறுவப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் சோதனை ஓட்டம் பூர்த்தி அடைந்து ஒப்பந்த நிபந்தனைகளின்படி கடந்த 01.07.2020 முதல் ஐந்தாண்டுகள் வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமே இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்த நிலையில், தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் அவர்களின் கடிதத்தின்படி 30.07.2025ன் ஐந்து ஆண்டுகால பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் ஒப்பந்தகாலம் முடிவுற்றுள்ளதால், சிதம்பரம் நகராட்சி 01.08.2025 முதல்

பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் பொறுப்பு ஏற்றுகொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி 01.01.2026 முதல் சிதம்பரம் நகராட்சி மூலம் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் வெளியேற்றப்படும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளைவிவசாய நிலங்களுக்கு விடுவதில் பொதுமக்களின் ஆட்சேபனை வந்ததால், மேற்படி சுத்திகரிகப்பட்ட கழிவுநீரை குழாய்கள் மூலம் வெள்ளாற்றில் விடுவதற்கான பணிகள் ரூ.478.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி கழிவு நீரேற்று நிலையத்தில் வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி கழிவுகளை விவசாய நிலங்கள் மற்றும் தோட்ட நிலங்களுக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**: மன்றம்அனுமதிக்கலாம்.

**சிதம்பரம்**
**27.05.2026**

**நகர்மன்ற தலைவர்**
**சிதம்பரம் நகராட்சி**

# <u>சிதம்பரம் நகராட்சி</u>

**2026ஆம் ஆண்டு வைகாசி திங்கள் 22 ஆம் நாள் 05.06.2026ந்தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணியளவில் நடைபெறும் அவசர நகர்மன்ற கூட்டம்**

**மன்றகூட்டப்பொருள்**

**1)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 13.03.2026 அன்று **பொதுநிதி** 2025-26-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **பொதுநிதி - 2025-26** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட குஞ்சிரமூர்த்தி விநாயகர் கோவில் தெருவில் (பன்னீர் செல்வம் தெரு அருகில்) சாலையோர பூங்கா அமைக்கும் பணி | திருமதி.ஆர்.சந்திரா, ஒப்பந்ததாரர், சிதம்பரம். | 2,00,000/- | மதிப்பீட்டுவிலையைவிட (-) 0.07 % குறைவு | |
| | | திரு.எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரர், நாஞ்சலூர் | | -- | மதிப்பீட்டு விலையை விட(+) 1.29% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி (-) 0.07 % மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஆர்.சந்திரா, ஒப்பந்ததாரர், சிதம்பரம். என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**2)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 13.03.2026 அன்று **பொதுநிதி** 2025-26-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் / விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **பொதுநிதி - 2025-26** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட குருதெருவில் (ஓரியண்டல் பள்ளி அருகில்) சாலையோர | திருமதி.ஆர்.சந்திரா, ஒப்பந்ததாரர், சிதம்பரம். | 1,00,000/- | மதிப்பீட்டு விலை யைவிட(-) | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பூங்கா அமைக்கும் பணி | | | 0.14 % குறைவு | |
| | | திரு.எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரர், நாஞ்சலூர் | | -- | மதிப்பீட்டு விலை யைவிட (+) 1.96% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி (-) 0.14 % மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஆர்.சந்திரா, ஒப்பந்ததாரர், சிதம்பரம். என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**3)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 27.02.2026 அன்று வருவாய் நிதி 2025-26-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி** 2025-26 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கொத்தங்குடி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | திரு.எஸ்.கிருஷ்ண மூர்த்தி, ஒப்பந்ததாரர், நாஞ்சலூர் | 9,95,000/- | மதிப்பீட்டு விலை யைவிட 0.17 % குறைவு | |
| | | திருமதி.ஆர்.சந்திரா, ஒப்பந்ததாரர், சிதம்பரம். | | -- | மதிப்பீட்டு விலை யைவிட 1.16 அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 0.17 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரர், நாஞ்சலூர் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**4)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 27.02.2026 அன்று வருவாய் நிதி 2025-26-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி 2025-26** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கச்சேரி தெருவில் இயங்கும் நூலகம் மற்றும் கனகசபை நகரில் இயங்கும் அங்கன்வாடி மையத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல் | திருமதி.கே.முத்து லட்சுமி, ஒப்பந்ததாரர் பனங்காடு | 9,90,000/- | மதிப்பீட்டு விலை யைவிட 0.31 % குறைவு | |
| | | திருமதி.ஆர்.சந்திரா, ஒப்பந்ததாரர், சிதம்பரம். | | -- | மதிப்பீட்டு விலை யைவிட 1.21 அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 0.31 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.கே.முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர் பனங்காடு என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**5)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 27.02.2026 அன்று வருவாய் நிதி 2025-26–ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி 2025-26** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி பெரியகாஜியார் தெரு (அங்காளம்மன் கோவில் தெரு சந்திப்பில்) உள்ள சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகாலினை சீரமைக்கும் பணி | திரு.எஸ்.கிருஷ்ண மூர்த்தி, ஒப்பந்ததாரர், நாஞ்சலூர் | 5,00,000/- | மதிப்பீட்டு விலை யைவிட 0.91% குறைவு | |
| | | திருமதி.ஆர்.சந்திரா, ஒப்பந்ததாரர், சிதம்பரம். | | -- | மதிப்பீட்டு விலையை விட 1.10 அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 0.91 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள

திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரர், நாஞ்சலூர் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**6)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 27.02.2026 அன்று வருவாய் நிதி 2025-26-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி** 2025-26 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான புதிய கணினிகள் வாங்கி வழங்கும் பணி | M/s. KK Infotech, Chidambaram | 9,95,000/- | மதிப்பீட்டு விலை யைவிட 1.41 % குறைவு | |
| | | M/s. Prasad Computer service, Virudhachalam | | -- | மதிப்பீட்டு விலையை விட 1.10 அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 1.41 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. KK Infotech, Chidambaram என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**7)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 12.03.2026 அன்று வருவாய் நிதி 2025-26-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி** 2025-26 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் CC பிளாட்பாஃர்ம் மற்றும் SS Stainless Steel Chair ஆகிய | M/s. Abbundu Interior and construction pvt ltd. chennai | 32,00,000/- | மதிப்பீட்டு விலை யைவிட 0.01 % குறைவு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கூடுதல் பணிகளை மேற்கொள்ளுதல் | M/s Aandal Associates Pvt ltd, | | -- | மதிப்பீட்டு விலை யைவிட 5.04 அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 0.01 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Abbundu Interior and construction pvt ltd. chennai என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**8)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் பணியினை செய்ய 12.03.2026 அன்று வருவாய் நிதி 2025-26–ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | வருவாய் நிதி 2025-26 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் மின்விளக்கு வசதிகள் மற்றும் பெயர் பலகை பணிகளை மேற்கொள்ளுதல் | M/s. Abbundu Interior and construction pvt ltd. chennai | 13,00,000/- | மதிப்பீட்டுவிலை யைவிட 0.99 % குறைவு | |
| | | M/s Aandal Associates Pvt ltd, | | -- | மதிப்பீட்டு விலையை விட 3.53 அதிகம் |

இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி மதிப்பீட்டு விலையைவிட 0.99 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Abbundu Interior and construction pvt ltd. chennai என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**9)** சிதம்பரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த மையங்களின் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின்படி 9 நகராட்சிக்கு சொந்தமான தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் 697 மாணவ மாணவியர்களுக்கும் மற்றும் அண்ணாமலை நகர் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட இரண்டு பள்ளிகளில் 36 மாணவர்களுக்கும் ஆக கூடுதல் 733 மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கு ஸ்ரீ அங்கு மீனாட்சி பவன் உணவகத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, 25.08.2023 அன்று முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

அவர்களால் துவங்கப்பட்டு, உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஆகஸ்ட் 2025 ஒப்பந்தகாலம் முடிவுற்ற நிலையில் மாணவ/மாணவிகளின் உணவு வழங்கும் திட்டமாக உள்ளதால் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.02.2026 முதல் 30.04.2026 வரை காலநீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பள்ளி மாணவ / மாணவிகளுக்கு உணவு வழங்கும் திட்டமாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்றுமாத காலத்திற்கு பணி மேற்கொண்டு தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**சிதம்பரம்**
**05.06.2026**

**நகர்மன்ற தலைவர்**
**சிதம்பரம் நகராட்சி**